## *மீனவர் ராஜ்கிரணின் உடலில் காயங்கள் எதுவும் இல்லை !: மனுதாரர்;*



சில நாட்களுக்கு முன்பு இலங்கை கடற்படைக்கு பயந்து கடல் நீருக்குள் மூழ்கி உயிரிழந்தார் மீனவர் ராஜ்கிரன். அதன்பின்னர் மீனவர் ராஜ்கிரன் உடல் தமிழ்நாட்டில் கொண்டு வரப்பட்டு அடக்கம் பண்ணப்பட்டது.



ஆனால் மீனவர் ராஜ்கிரணின் மரணத்தில் சந்தேகம் உள்ளதாக அவரது மனைவி தரப்பில் கூறப்பட்டது. இந்த நிலையில் அவரின் உடல் தோண்டி எடுக்கப்பட்டு உடற்கூறு ஆய்வுக்கு கொடுக்கப்பட்டது.

இந்த நிலையில் இலங்கை கடற்படை கப்பலில் இருந்து கடலில் மூழ்கி இறந்த மீனவர் ராஜ்கிரணின் உடலில் காயங்கள் ஏதும் இல்லை என்று தகவல் வெளியாகி உள்ளது. ராஜ்கிரணின் உடல் , உடற்கூறு ஆய்வுக்கு பின் வைக்கப்படாமல் உடைகள் அணிவிக்கப்படாமல் இருந்தது என்றும் கூறப்படுகிறது.

இதனால் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மீனவர் மனைவி தரப்பில் கூறப்பட்டுள்ளது. மத்திய அரசை தாமாக முன்வந்து சேர்ப்பதாகவும், நோட்டீஸ் அனுப்பவும் உயர் நீதிமன்ற கிளை உத்தரவிட்டுள்ளது. மீனவர் ராஜ் கிரன் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என மனைவி பிருந்தா தொடர்ந்த வழக்கில் இத்தனை உத்தரவினை உயர்நீதிமன்ற மதுரை கிளை கூறியுள்ளது.

[மீனவர் ராஜ்கிரணின் உடலில் காயங்கள் எதுவும் இல்லை!: மனுதாரர்; | Tamil Minutes]